18.03.2026

O.S.No. 48/2023

PW1– திவான் அலி – த/பெ. ஹபீப் ரஹ்மான்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.03.2026

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் விவாகரத்து கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பலமுறை பிரதிவாதி மகளிர் காவல்நிலையம் மற்றும் அச்சன்புதூர் காவல்நிலையம் சென்றார். சேர்ந்து வாழ வேண்டும் என்று காவல்நிலையம் செல்வார், ஆனால் என்னுடன் சேர்ந்துவாழ மறுத்துவிடுவார்.

2. சேர்ந்து வாழ வேண்டி நான் எதுவும் வழக்கோ அல்லது அறிவிப்போ அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த அறிவிப்பை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சேர்ந்துவாழ எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான், பிரதிவாதியிடம் இருந்து திருமணத்தின்போது 27 களஞ்சி நகை அவருக்காகவும், 3 களஞ்சி நகை எனக்காகவும், ரூ.37 ஆயிரம் ரொக்கம் எனக்கு என குறைத்து மதிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி குடும்பத்தினர், திருமணத்தின்போது பிரதிவாதிக்கு 50 பவுன் நகையும், எனக்கு 3 பவுன் நகையும், ரொக்கமாக 3 லட்சமும் திருமணத்தின்போது கொடுத்தார் என்றால் சரியல்ல.

4. பொதுவாக முஸ்லீம் திருமணத்திற்கான செலவு பெண்வீட்டில் தான் செய்வார்கள் என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் திருமணம்

விமரிசையாக நடைபெற்றது என்றால் சரியல்ல, நான் தான் சாப்பாடு செலவு செய்தேன். பிரதிவாதி குடும்பத்தினர் திருமணத்திற்காக ரூ.5 லட்சம் செலவு செய்தார் என்றால் சரியல்ல.

5. பொதுவாக பள்ளிவாசல் பதிவேட்டில் திருமணத்தின்போது கொடுத்த நகைகளை குறைத்துதான் எழுதுவார்கள் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது கொண்டுவந்த சீர்வரிசைகள், நகைகள் என்வசம் உள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதி வசம் தான் உள்ளது. மேற்படி சங்கதிகளை எனது காவல்துறை புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, தலாக் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிராதில் மட்டும் தான் சொல்லியுள்ளேன்.

6. நான் வழக்கிற்காக தான் பிரதிவாதி வசம் தான் சீர்வரிசைகள் உள்ளது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அதை அபகரிக்கவேண்டும் என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

7. குழந்தைகளை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் அவர்கள் பிரதிவாதி வசம் தான் உள்ளார்கள். எனது தரப்பில் வேறு யாரரையும் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தான் பொய்யாகதான் எனது மனைவி, பிள்ளைகளை நன்றாக கவனித்தேன் என பொய்யாகக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதி என்னை அசிங்கமாக பேசியதை பற்றி எனது ஜமாத்தாரிடமோ, வேறு யாரிடமோ கூறி முறையிட்டேனா என்றால் குழந்தைகளின் நலனுக்காக நான் யாரிடமும் சொல்லவில்லை. எனது முதல்குழந்தையின் திருமணத்தில் நான் பங்கேற்வில்லை என்றால் சரிதான், அவருக்கு திருமணம் நடந்தே எனக்கு தெரியாது. நான் இறந்துவிட்டதாக திருமணம் செய்து வைத்துள்ளார்கள். எனது முதல்மகளின் கணவருக்கும் எனது ஊர் என்றால் சரிதான்.

9. முதல் மற்றும் இரண்டாவது மகளின் திருமணம் தௌகித் ஜமாத்தில் வைத்து நடைபெற்றது. முதல்மகள் திருமணத்தை நான் நடத்தக்கூடாது என தடை செய்தேனா என்றால் இல்லை. நான் தடை செய்தேன், அதைமீறியும் முதல்மகளின் கணவர் அவரை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல.

10. பிரதிவாதி எப்போதும் யாரிடமோ தொலைபேசியில் பேசுவவதாக கூறியுள்ளேன், அது யாரிடம் என கேட்டுள்ளேனா என்றால் நான் கேட்கவில்லை அது அசிங்கமான விஷயம் என்பதால் நான் கேட்கவில்லை. நான் வழக்கிற்காக பிரதிவாதி யாரிடமோ பேசுவதாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதி ஒழுங்கமற்ற பெண் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஒழுங்கமில்லாத பெண் என்று சொல்லியுள்ளதை நிரூபிக்க நான் எதுவும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எனது 3 குழந்தைகளின் நலனுக்காக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

11. எனது தந்தை எனது முதல்மகளின் திருமணத்திற்கு பணம் கொடுத்துள்ளார். எவ்வளவு கொடுத்துள்ளார் என்றால் ரூ.10 ஆயிரம்

கொடுத்துள்ளார். எனது தந்தை எனது மூத்தமகளின் திருமணத்தின் கலந்துகொள்ளவில்லை, அவரிடமும் திருமணத்தை பற்றி யாரும் சொல்லவில்லை. எனது தந்தை தொகை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. காவல்நிலையத்தில் பிரதிவாதி என்னுடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார் என நான் எதுவும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் காவல்நிலையத்தில் சேர்ந்து வாழ்வதாக கூறி பின்னர் சேர்ந்து வாழ மறுத்துவிடுவார். நான் தான் பிரதிவாதியை சேர்ந்து வாழ மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல.

13. இந்த வழக்கிற்கு முன்பு பிரதிவாதி என் மீது தென்காசி, மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.567/2021 என ஒரு பராமரிப்பு தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கை அவர் தாக்கல் செய்ததால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு தாக்கல் செய்து நீண்ட நாள் கழித்து இந்த வழக்கு ஏன் தாக்கல் செய்தேன் என்றால் சேர்ந்துவாழ மறுத்துவிடடதால் தாக்கல் செய்தேன். சேர்ந்து வாழ யாதொரும் அறிவிப்பும் அனுப்பாமல், நான் ஏன் விவாகரத்து திருநெல்வேலியில் இருந்து அனுப்பினேன் என்றால் ஷரியத் சட்டம் தெரிந்த நபர் திருநெல்வேலியில் உள்ளார், அதனால் அங்கிருந்து அனுப்பினேன்.

14. நான் அனுப்பிய தலாக் அறிவிப்புகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அனுப்பிய 2 தலாக் தலாக் அறிவிப்பினை பெற்றுக்கொண்டார், 3 வது அறிவிப்பினை பெற்றுக்கொள்ளவில்லை. நான்

அனுப்பிய தொகையும் திருப்பி அனுப்பிவிட்டார். எனது முதல்விசாரணைவாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி பிரதிவாதிக்கு யாரிடமும் தொடர்புமில்லை, பல சண்டை சச்சரவுகள் நடந்ததில்லை என என்றால் சரியல்ல.

15. பிரதிவாதி பல ஆண்களுடன் தொடர்பு உள்ளது என்றால் அவர்கள் பெயரை சொல்லலாம் என்றால் நீதிமன்றத்தில் சொல்ல எனக்கு அசிங்கமாக உள்ளது. அது உண்மை இல்லை என்பதால் தான் பெயரை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது சங்கதியை நிரூபிக்க வேறு சாட்சி உள்ளதா என்றால் நான் மட்டுமே எனது தரப்பு சாட்சியை நிரூபிக்க உள்ளேன்.

16. பிரதிவாதி ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்தபின்பு நான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே பெற்றுவிட்டேன். விற்ற சொத்துகக்ளின் மதிப்பு ரூ.1 கோடி இருக்கும் என்றால் சரியல்ல, 35 லட்சத்திற்கு விற்றேன். எனக்கு 60 லட்சத்திற்கு கடன் இருந்தது. நான் வழக்கிற்காக தான் கடன் இருக்கிறது என பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. விற்ற தொகையை எனது சுயலாபத்திற்காக செலவழித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

17. எனது மகனுக்கு நான் வாங்கிக்கொடுத்த பைக்கால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான், ஆனால் பைக் வாங்கிக்கொடுக்க பிரதிவாதிதான் என்னை கட்டாயப்படுத்தினார். அந்த பைக் எனது பெயரில் தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பைக்கிற்கான காப்பீடு எனக்கு மட்டும் தான் போடப்பட்டது என்றால் சரியல்ல.

18. விபத்து ஏற்பட்ட சமயத்தில் நான் மோட்டார் மெக்கனிக்காக தான் பணியாற்றினேன் என்றால் சிறுவயதில் இருந்து தற்போது வரை மெக்கனிக்காகதான் பணியாற்றிவருகிறேன். விபத்தும் எனது பணியின் போது தான் நடைபெற்றது என்றால் சரியல்ல, எனது மகன் எனது பணிக்கு வரவே மாட்டார். நாங்கள் பிரிந்த பின்பு, எனது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் எந்த நிதியுதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல, வீடு வாடகைக்கு எடுத்துக்கொடுத்தேன், மளிகை சாமானுக்கும் ஏற்பாடு செய்தேன். ஆனால் 2 மாதத்தில் காலி செய்து என்னிடம் சொல்லாமல் சென்றுவிட்டார்கள். வீட்டுக்காரரையும், கடைக்காரரையும் சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்க தயாராக உள்ளேன். நான் வழக்கிற்காக தான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

19. நான் கூறிய காரணம், விவாகரத்திற்கான காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் தீய பழக்கத்தினாலும், 2 ம் திருமணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தாலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai